www.lkedu.lk

கல்வித்தகை

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)

தமிழ்

தரம் – 4

Teacher : HM.Asthaq (BSc in PED)

சுட்டெண் - ..... **நேரம் – 1 மணித்தியாலம்**

1. **பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சுறுசுறுப்புக்கு எவற்றை எடுத்துக்காட்டாகக் கூறுவார்கள்? எறும்பையும் தேனீயையும் தானே! இன்று நாம் தேனீக்களைப் பற்றி அறிந்து கொள்வோமா? தேனீக்கள் மரக் கொம்பு மரப்பொந்து, குகை முதலிய இடங்களிலே கூடமைக்கும். அவற்றில் உணவுக்காகத் தேனைச் சேமித்து வைக்கும். பண்டைக்கால மக்கள் அந்தத் தேனையும் மெழுகையும் சேகரித்தனர். தேனீக்களில் மலைத்தேனீ, கொம்புத்தேனீ, பொந்துத்தேனீ எனப் பல வகைகள் உண்டு. அவற்றுள் நாம் கூட்டில் வளர்க்கத் தக்கதும் அதிக பயனைத் தரத்தக்கதும் பொந்துத் தேனீயாகும். அது வாழும் கூட்டில் இராணித் தேனீ, வேலைக்காரத் தேனீ, சோம்பேறித் தேனீ என மூவினத் தேனீக்கள் உண்டு.

1) சுறுசுறுப்புக்கு எவற்றை எடுத்துக்காட்டாக கூறுவார்கள்?
.....

2) தேனீக்கள் எவ்வாறான இடங்களில் கூடமைக்கும்?
.....

3) பண்டைக்கால மக்கள் எவற்றை சேகரித்தனர்?
.....

4) பந்தியில் வந்துள்ள எதிர்கால வினைச்சொல் ஒன்றை எழுதுக.
.....

5) தேனீக்களின் வகைகள் எவை?
.....

6) ஆகாரம் என்பதன் ஒத்த சொல் யாது?
.....

(6 × 2 = 12 புள்ளிகள்)

2. **வேறுபட்ட சொல்லின் கீழ் கோடிடுக**.

1) அடவி , கானகம் , காடு , வானம்
2) காயம் , தோல் , மேனி , சரீரம்
3) அதிபர் , பாடசாலை , ஆசிரியர் , மாணவர்கள்
4) தென்னை , மரம் , பனை , முதிரை

(4 × 2 = 8 புள்ளிகள்)

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk

3. **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) பகை அரசருக்கு கொடுக்கப்படும் திரைப் பொருள்,
i.மரபு ii.கப்பம் iii. கையுறை

2) "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி " என்பது,
i.அடுக்குத்தொடர் ii. இணைமொழி iii. பழமொழி

3) "வெள்ளை முயல் புல் திண்றது " இதில் வந்துள்ள அடைமொழி,
i.வெள்ளை ii. திண்றது iii. முயல்

4) அன்பு என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
i.பாசம் ii. இரக்கம் iii. வன்பு

5) ஒவையார் எழுதிய நூல்களுள் ஒன்று,
i.மூதுரை ii. உலகநீதி iii. நன்னூல்

(5 × 2 = 10 புள்ளிகள்)

4. **அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

1) நாங்கள் கிண்ணியா (பாளத்தை , பாலத்தை) கடந்து சென்றோம்.

2) தம்பி காலையில் (தேனீர் , தேநீர்) அருந்தினான்.

3) நாங்கள் (யாணைகள் , யானைகள்) சரணாலயத்திற்குச் சென்றோம்.

4) நீண்ட நேரமாக வாகன ஓசை (ஒளித்து , ஒலித்து) க் கொண்டிருந்தது.

5) கடுகு சிறிதானாலும் (காறம் , காரம்) பெரிது.

(5 × 2 = 10 புள்ளிகள்)

5. **பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1) காகம் கூடு கட்டியது.
.....
2) நான் நேற்று கடைக்குச் சென்றேன்.
.....
3) அது தினமும் பழம் உண்ணும்.
.....
4) எனது ஆசிரியர் மிகவும் நல்லவர்.
.....

(4 × 2 = 8 புள்ளிகள்)

www.lkedu.lk

6. தடித்த எழுத்துக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர் கருத்துச் சொல்லை இட்டு வாக்கியங்களை மீண்டும் எழுதுக.

1) வாகனங்கள் **வேகமாகச்** செல்கின்றன.

.....

2) அவன் **நன்மை** செய்ய விரும்புவான்.

.....

3) வாமன் பணத்தின் மீது **ஆசை** கொண்டவன்

.....

4) என்னிடம் **பழைய** ஆபரணங்கள் உண்டு.

.....

5) சுற்றுச்சூழல் **சுத்தமாக** உள்ளது.

.....

(5 × 2 = 10 புள்ளிகள்)

7. தரப்பட்டுள்ள இறந்த கால வாக்கியங்களை எதிர்காலத்தில் எழுதுக.

1) கமல் பாடசாலைக்குச் சென்றான்.

.....

2) ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.

.....

3) அவர்கள் மைதானத்தில் விளையாடுகின்றார்கள்.

.....

4) மாமா வீட்டிற்கு வந்தார்.

.....

(4 × 2 = 8 புள்ளிகள்)

8. சேர்த்தெழுதுக.

1) கடல் + கரை = ...
2) வாழை + குலை = ...
3) மரம் + வேர் = ...
4) முள் + செடி = ...
5) பனை + ஓலை = ...

(5 × 2 = 10 புள்ளிகள்)

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

9. பொருத்தமான சொற்களைக் கொண்டு புள்ளிக்கோடிட்ட இடங்களை நிரப்புக.

(மட மட , அல்லும் பகலும் , சல சல , ஆடிப்பாடி , வாடி வதங்கி , சிறிய சிறிய , மேடு பள்ளம்)

1) சந்தையில் உள்ள காய்கறிகள் ..... காணப்பட்டன.

2) நதி ..... என ஓடியது.

3) அது ..... நிறைந்த பாதையாகும்.

4) தோட்டத்திலுள்ள ..... பூக்கள் கண்களைக் கவர்ந்தன.

5) அவன் பாத்திரத்திலுள்ள நீரை ..... என்று குடித்தான்.

6) நாங்கள் ..... விளையாடினோம்.

(6 × 2 = 12 புள்ளிகள்)

10. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.

1) ஆழி - .....
2) இன்னல் - .....
3) பார் - .....
4) மேனி - .....
5) களிப்பு - .....
6) பரி - .....

(6 × 2 = 12 புள்ளிகள்)

கல்வித்தகை